தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 347/ந/2023
நாள் 19.12.2023

திரு. S.தமீம்,
மேல்விஷாரம்,
இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மேல்விஷாரம் நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர் மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், மேல்விஷாரம், கட்டகடை தெரு, எண்.50/2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.தமீம் என்பவரின் 25.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.10.2023 அன்று பெறப்பட்டு 347/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், மேல்விஷாரம், கட்டகடை தெரு, எண்.50/2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.தமீம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கால்வாயை தூர்வாராமல் இருப்பதாகவும், உடைந்த கால்வாய் மூலம் மழைநீர் தெருக்களில் செல்வதாகவும், குடிநீர் குழாய் இணைப்புக்காக தோண்டப்பட்ட பள்ளம் மூடாமல் இருப்பதாகவும் தெருவிளக்குகள் எரியாமல் இருப்பதாகவும் மற்றும் வாகன சட்ட விதிகளை பின்பற்றாமல் குப்பை அள்ளும் இயந்திரம் செயல்படுவதாகவும் புகைப்படங்களுடன் புகார் தெரிவித்துள்ளார்.

ஆகவே இதன் மீது விசாரணை நடத்தி, இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை மேற்கொண்டு மேற்கண்ட குறைகளை சீர் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மேல்விஷாரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் தனது 29.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"திரு.எஸ்.தமீம் என்பவர் தனது 25.10.2023 நாளிட்ட மனுவில் மேல்விஷாரம் நகராட்சியில் சுகாதார சீர்கேடுகள் உள்ளதாகவும், ஆபத்தான நிலையில் தெருக்கள் அமைந்துள்ளதாகவும் தெரிவித்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார். இதே போன்று மனுதாரர் தனது 15.05.2023 நாளிட்ட மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளித்திருந்ததையடுத்து, அம்மனுவின் மீது மேல்விஷாரம் நகராட்சியால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன. புகார்கள் அனைத்தும் சரிசெய்யப்பட்டுவிட்டன என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவிப்பதுடன், அதன் புகைப்பட நகல்களையும் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மேல்விஷாரம் நகராட்சிப் பகுதிகளில் 25 நிரந்தர தூய்மைப் பணியாளர்களும், வெளியிலிருந்து எடுக்கப்பட்ட (OutSourcing) 84 தூய்மைப் பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டு குப்பைகளை தரம் பிரித்து நுண்ணுயிர் மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. அதே போன்று திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 18 இலகுரக வாகனங்கள் மற்றும் 19 Battery operated Vehicles பயன்படுத்தப்பட்டு குடியிருப்புப் பகுதிகளில் உள்ள குப்பைகள் அகற்றப்படுகின்றன.

மேலும், 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு, நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் ஆகிவற்றின் கீழ் ரூபாய் 349 இலட்சத்தில் மேல்விஷாரம் நகராட்சிப் பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்கண்ட திட்டங்கள் மற்றும் நமக்கு நாமே திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூபாய் 187.25 இலட்சம் செலவில் புதிய தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் (LED) பொருத்துதல், பழுதடைந்த விளக்குகளை நீக்கி புதிய மின் விளக்குகளை பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கண்ட விவரங்களை மாண்புமிகு முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் மேல்விஷாரம் நகராட்சி ஆணையரும் 29.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு. S.தமீம், 29.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. குடிநீர் குழாய் இணைப்பிற்காக சாலையின் குறுக்கில் தோண்டப்பட்டுள்ள பள்ளம் மூடப்படாத நிலையில் உள்ளது. மேலும் அங்குள்ள கால்வாயை தூர் வாராமலும், அங்குள்ள கால்வாய் உடைபட்டு தண்ணீர் தெருக்களில் ஓடுகிறது. மேலும் அங்குள்ள சாலைகளில் தண்ணீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட நகராட்சியில் பல தெருக்களில், தெரு விளக்குகள் எரியாமல் உள்ளன. அங்குள்ள சாலைகளும் பழுதடைந்துள்ளன. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே மேற்கண்ட மேல்விஷாரம் நகராட்சியில், தெரு விளக்குகள் மற்றும் சாலைகளை சீரமைக்கவும், கால்வாயை தூர் வாரவும், அப்பகுதியில் சேரும் குப்பைக் கூளங்களை தேவையான வாகனங்களைக் கொண்டு அகற்றவும் நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(5) எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் (பொறுப்பில்) பணிபுரியும் திரு.ப.சந்தானம் என்பவர் 31.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருந்த சாலை வசதி, தெரு விளக்குகளை பழுதுபார்த்து புதிய விளக்குகளை அமைத்தல், குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக தோண்டப்பட்ட பள்ளங்களை மூடுதல், பழுதடைந்த சாலைகள் போன்ற பணிகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அவற்றின் புகைப்படங்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். மேலும் மேல்விஷாரம் நகராட்சியில் குப்பைகளை அகற்ற புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு அவற்றின் மூலம் அங்குள்ள குடியிருப்புப் பகுதிகளில் சேரும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்படுகின்றன. மேலும் மத்திய நிதிக் குழு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சிப் பகுதிகளில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரரிடமிருந்து குறிப்பிட்ட சாலைப் பணிகள் பழுதுபார்ப்பது குறித்து கோரிக்கை மனு பெறும் பட்சத்தில், அவை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப செய்து முடிக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.S.தமீம் என்பவர் தனது 25.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குடிநீர் குழாய் இணைப்பு பணிமேற்கொண்டு, சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளத்தினை மூடாமல் இருப்பதாகவும், கால்வாயை தூர்வாராமல் இருப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும், மேலும் உடைந்த கால்வாயை சீர் செய்யாமல் இருப்பதால் மழைநீர் தெருக்களில் வீணாக செல்வதும், சாலை பராமரிக்கப்படாததால், மழைநீர் தெருக்களில் தேங்கி நிற்பதும், பல்வேறு பகுதிகளில் தெருவிளக்குகள் எரியாமல் இருப்பதாகவும் குப்பைகளை அகற்ற பழைய வாகனத்தை உபயோகப்படுத்துவதாகவும் மற்றும் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளின்றி சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிர்வாகக் குறைபாடுகள் உள்ளதாகவும், குறைபாடுகள் உள்ள இடத்தின் பெயரை குறிப்பிடாமல் பொதுவாக புகைப்படங்களுடன் புகார் தெரிவித்துள்ளார். மனுதாரர் ஏற்கனவே இதே புகாரினை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 15.05.2023 நாளிட்ட மனு அளித்துள்ளார். அப்புகார் மனு, நகராட்சியில் வரப்பெற்றதும், நகராட்சி நடவடிக்கைகள் எடுத்து, மனுதாரர்

தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் சீர் செய்யப்பட்டுள்ளன என ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்கள் வாயிலாகத் தெரிய வருகிறது.

மேல்விஷாரம் நகராட்சியில் 25 நிரந்தர மற்றும் 84 ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டு, தரம் பிரிக்கப்படுவதாகவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 37 வாகனங்கள் மூலம் குடியிருப்புகளின் குப்பைகள் அகற்றப்படுவதாகவும், 15வது மத்திய நிதித்திட்டம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ 349 இலட்சம் செலவினத்தில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டும், மேலே தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ187 இலட்சம் செலவினத்தில் புதிய மின் கம்பங்கள் மற்றும் LED தெருவிளக்குகள் பொருத்தப்பட்டும் இருப்பதாக ஆணையாளரின் அறிக்கை மூலம் தெரியவருகிறது.

மேற்காணும் நிலையில், மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

வருங்காலங்களில் பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டவுடன் களப்பணியாளர்கள் மூலம் குறைபாடுகளை கண்டறிந்து உடனுக்குடன் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு. S.தமீம்,
50/2, கட்டகடை தெரு,
மேல்விஷாரம், வாலாஜா வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம் – 632 509.
2) ஆணையாளர், மேல்விஷாரம் நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்